# புதுமைப்பெண் திட்டம் – தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் 4 இலட்சம் மாணவர்கள் – 1.14 கோடி மகளிர்க்கு கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் பணியை திறம்பட செய்து வருகிறோம்!

## சட்டப்பேரவையில் - தகவல் தொழில் நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பெருமிதம்!

**சென்னை, ஏப்.27**

**சட்டப்பேரவையில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக்கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் என்று 4 இலட்சம் மாணவர்களுக்கும் 1.14 கோடி மகளிர்களுக்கு கலைஞர் உரிமைத் தொகை மாதந்தோறும் ஒவ்வொருவர்க்கும் ரூபாய் 1000 இணையதலம் மூலம் வழங்கும் பணியை திறம்பட மேற்கொண்டு வருகிறோம் என்று பதிலுரையில் பெருமையுடன் குறிப்பிட்டார்.**

அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வழங்கிய பதிலுரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்றைக்கும் வழிகாட்டியாகத் திகழும், என்னை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்திருக்கும் என் தலைவர் முதலமைச்சர் அவர்களை வணங்கி, மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இங்கு இரண்டரை மணி வரை காத்திருக்கும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையைத் துவங்குகிறேன். குறிப்பாக இன்றைக்கு உரையாற்றிய உறுப்பினர்களுக்கும், அதிலும் என்னுடைய துறையைப் பற்றி அதிகமான கருத்துகளைத் தெரிவித்த உறுப்பினர் வி.பி.கந்தசாமி அவர்களுக்கும், உறுப்பினர் கோ. செந்தில்குமார் அவர்களுக்கும், உறுப்பினர் ஓ.ஜோதி அவர்களுக்கும், உறுப்பினர் ரா. இளங்கோ அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கிராமப்புறங்களில் 2,3 கிலோ மீட்டருக்கும் நகர்ப்புறங்களில் ஒரு கிலோ மீட்டருக்குள்ளும் இ–சேவை மையங்கள்!

இந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும் பல பணிகள் இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பில் 7 நிறுவனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று ELCOT, இரண்டாவது TNeGA, மூன்றாவது Tamil Virtual Academy, நான்காவது TACTV, ஐந்தாவது TANFINET, ஆறாவது ICT Academy, ஏழாவது iTNT. இந்த 7ல் 6 நிறுவனங்கள் நாங்கள் ஆட்சிக்கு வரும்போது இருந்தன. இந்த iTNT Hubஐ பொறுத்த வரையில், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ELCOT SEZஐ பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே உறுப்பினர்கள் கந்தசாமி அவர்களும், செந்தில்குமார் அவர்களும் இதைப்பற்றி கேள்வி எழுப்பியதால் நான் கூறவேண்டிய கடமையுள்ளது. மொத்தம் 8 ELCOT, 1,288 ஏக்கர், அதற்கான செலவு மொத்தம் ரூபாய் 852 கோடி. பல ஆண்டுகளுக்கு முன்னால் திறக்கப்பட்டுள்ளன. அவர் சொல்வது உண்மை பல ELCOT SEZ அவர்களுடைய காலத்தில் திறக்கப்பட்டன. அதற்கு பல முயற்சிகளை அவர்கள் ஆரம்பித்து இருந்தார்கள். ஆனால், அந்தப் பணிகளை முடிக்க முடியாமல் சென்று விட்டார்கள். அதை முடிந்த அளவிற்கு நிறைவேற்றி, இன்றைக்கு சுமார் ஒன்றே கால் இலட்சம் நபர்கள் பணி செய்யும் அளவில், சுமார் 35,000 ஆயிரம் கோடி அங்கிருந்து ஏற்றுமதி செய்யும் வகையில் சேவைகள், மென்பொருள் நிறுவனங்கள் நடந்துக்கொண்டிருக்கிறது.

கோயம்புத்தூரில் இருக்கிற parkல் நீங்கள் ஆரம்பித்து வைத்த இரண்டே முக்கால் இலட்சம் சதுரடி கொண்ட அந்த Towerஐ திறந்து இப்போதைக்கு M/s. Capgemini Technology Services India Limited, M/s. Texila Educare Healthcare and Technology Enterprises Private Limited, M/s. Value Momentum Software Services Private Limited, M/s. MedCode Services Private Limited, M/s. Hedgemark Technologies Private Limited, M/s. iGenius Artificial Intelligence Services Private Limited என்று பல நிறுவனங்கள் முழுமையாக அங்கே குத்தகைக்கு எடுத்து செயல்பாட்டில் இருந்து கொண்டு வருகிறது.

சோழிங்கநல்லூரில் நான் ஏற்கெனவே கூறியதுபோல் அந்த கட்டடத்திற்கு கிட்டத்தட்ட 18 clearance தேவை இருந்தது. அதில் 14 கிடைத்திருக்கிறது. மீதியும் முடிக்கப்பட்டு அவையும் பயனுக்கு வந்துவிடும். இந்த 8 SEZ தவிர எங்களுக்கு வேறு எந்த Park promotion வேலையெல்லாம் இல்லை. ஆனால், அரசுக்கு கூடுதல் பணி செய்யக்கூடிய வகையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி எல்லா IT நிறுவனங்களுக்கும் துவக்குவதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் guidelinesஐ தொழில் துறை செய்ததே தவிரபலர் எங்களிடம் வைத்திருக்கிற கோரிக்கை நாங்கள் செயல்பட்டுகொண்டிருக்கும் போது எங்களுக்கு உதவி தேவைப்படுகிறது. அரசை அணுகுவதற்கு அல்லது ஏதாவது clearanceக்கு, metro மாதிரி திட்டம் வரும்போது எங்களுக்கு தகவல் பரிமாற்றுவதற்கு, எங்களுடைய கருத்துகளை அந்த நிறு வனத்திற்கு தெரிவிப்பதற்கு என்ற அடிப்படையில் ஒரு Facilitation Cell உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் அறிவித்ததன்படி அந்த பணியை இப்போது துவங்கிக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல், cuttingedge technology இன்றைக்கு என்ன புதுமையாக எல்லா இடங்களிலும் இருக்கிறதோ அதை அனைத்து இளைஞர்களும் நன்கு அறிய வேண்டும். உலகத்திலேயே சிறந்த நிபுணர்களிடமும் பெரிய நிறுவனங்களிடமும் இருந்து அறிய வேண்டும் என்பதற்காக பல முயற்சிகள் எடுக்கிறோம். அதற்காக policy உருவாக்குகிறோம். குறிப்பாக, இந்த Budgetல் அறிவிக்கப்பட்டிருக்கிற AVGCXR. ஆனால் 2023 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு ஆண்டுதோறும் ஒரு IT conference, மாநாடு நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் 2023க்கு பிறகு 2024, 2025 என்று கடந்த 3 வருடங்கள் தொடர்ந்து நடத்தியதால் இது ஒரு Annual conference in the Global Technology Conference Calendar என்கிற மாதிரி ஏற்றி உலகளவில் பெரிய நிபுணர்கள் பெரிய தொழிலதிபர்கள் பெரிய Corporate Executivesஐ வரவேற்று திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளும், நிறைவு விழாவிற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளும் வந்து எங்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள். செயற்கை நுண்ணறிவு அதாவது Artificial Intelligence, Electric Vehicles, Quantum Computing உள்ளிட்ட latest technologiesம் பல ஆயிரம் மாணவர்கள் இதை தெரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நடத்துகிறோம்.

### 437 இணையதள சேவைகள்!

சுமார் 15,000 attendees மாநாட்டில் நேரடியாகவும், பல கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்கு broadcast மூலமாகவும் அனுப்பப்பட்டு, அதனால் பல இலட்சம் நபர்கள் advanced technologiesஐக் கற்றுக் கொள்வதற்கு ELCOTல் முயற்சி செய்கிறோம். அடுத்ததாக, அரசாங்கம் சிறப்பாகச் செயல்படுவதற்கு சுமார் 60, 70 இடங்களில் சேர்க்கப்பட்டு வைத்திருந்த dataவை எல்லாம் ஓரிடத்திற்குக் கொண்டுவந்து, State Data Centre1 & Backup Data Centre2, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் தமிழ் மேகம் Cloud, அதாவது நாமே இயக்கக்கூடிய cloud ஆகியவற்றை உருவாக்கி, அரசாங்கத்தின் சுமார் 437 online services, அதாவது இணையதள சேவைகள் இந்த Data Centresலும், Cloudலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அரசாங்கத்தின் செயல்பாடுகளைச் சிறப்பிக்கும் வகையிலும், அதேபோல் மக்களுக்கு இந்தச் சேவைகளை அணுகுவதற்கு சுலபமாக இருப்பதற்கும், இதனை இசேவையாக மாற்றிக் கொண்டு வருகிறோம்.

அடுத்ததாக, Procurement. எப்பொழுதெல்லாம் அரசாங்கம் IT hardware பொருட்களை வாங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் நாங்கள் உதவி செய்கிறோம். சிலர் நேரடியாக வாங்குகிறார்கள், சிலருக்கு நாங்கள் உதவி



செய்கிறோம். நாங்கள் ஏற்கெனவே rate contract போன்றவற்றை நிர்ணயித்து, குறுகிய நேரத்தில் குறைந்த விலையில் பொருட்களை வாங்கிக் கொடுப்பதற்கு உதவுகிறோம். சென்ற ஆண்டு சுமார் 350 கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் procurement செய்யப்பட்டன. இந்த ஆண்டு, ECourts, அதாவது நீதிமன்றம் உட்பட, அது சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த ஆண்டு laptop scheme, 10 இலட்சம் laptop தொடர்பான schemeஐயும் ELCOT மூலமாக செயல்படுத்துவதற்கு இந்தத் துறை செயல்படும்.

அடுத்தபடியாக, Digital Office, அதாவது EOffice. சுமார் 41 இலட்சம் அரசாங்கக் கோப்புகளை digitize செய்து, இன்று சுமார் 1.5 இலட்சம் அரசு ஊழியர்கள் அவர்களின் பணிகளை முழுமையாக computerலேயே செய்யும் வகையில், எந்த வகையிலும் அவர்கள் paper மற்றும் file ஆகியவற்றை நாடாமல் efficient ஆக செயல்படுவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம். இது அரசாங்கத்தின் செயல்பாட்டைச் சிறப்பிக்கும் ஒரு முயற்சியாக இருக்கும். அதேபோன்று, அனைத்து dataவையும் integrate செய்யும்போது, நமக்கு பல தெளிவுகள் கிடைக்கின்றன. அதனால் State Family Database என்ற அடிப்படையை உருவாக்கி, அந்த databaseலிருந்து அரசாங்கத்தின் அனைத்து சேவைகள் மற்றும் திட்டங்களும் சரியான பயனாளிகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவும், யாரும் விடுபட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், அதேபோல் தவறான நபர்களுக்கு இந்த நிதி போய் சேரக்கூடாது என்ற அடிப்படையிலும் இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். நான் சொன்னதுபோல், பல databaseஐ integrate செய்து, centralized systemலிருந்து, இன்றைக்கு, UMIS, அதாவது Integrated University Management Information System, அதாவது, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் பார்க்கும் சுமார் 80க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு பல்கலைக்கழகங்களும், 5,487 கல்வி நிறுவனங்களும் இதில் இணைக்கப்பட்டு, எல்லா மாணவர்களுடைய எல்லா தகவல்களும், அதாவது அவர்களுடைய graduation certificate, mark sheet போன்ற அனைத்து விவரங்களும் எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும் வகையில், UMISம் இங்கு செயல்படுத்தப்படுகிறது.

## இ–சேவை பிற துறைகள் சார்ந்த சேவைகளை ‘வாட்ஸ் – அப்’ பில் ஒருங்கிணைத்து வழங்கும் திட்டம்!

அதேபோல், புதிதாக நாம் ஆட்சிக்கு வந்தபிறகு, உருவாக்கப்பட்ட புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட திட்டங்கள் சுமார் 4 இலட்சம் மாணவர்களுக்கு மாதந்தோறும் அவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு நிதி அனுப்புவதும், direct deposit செய்வதும், அதேபோல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு ஒரு கோடியே 14 இலட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் செலுத்துவது போன்ற செயல்பாடுகள் எல்லாம் இந்த database மூலம், TNeGA வழியாக transfer செய்யும் பணி செயல்படுத்தப்படுகிறது. சுமார் 2.24 கோடி குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து குடும்பங்களின் தகவல்களும் இதில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. நான் நிதி அமைச்சராக இருந்தபோது, முதன்முறையாக income tax துறையிடமிருந்து, முதல் மாநிலமாக நாம் இந்திய அரசிடமிருந்து API பெற்று, அந்த விவரங்களை இணைத்ததால், efficiency of spending, அதாவது நாம் ஒரு ரூபாய் செலவு செய்தால், அது waste ஆகாமல், அதே சமயம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு அது போய்ச் சேரும் வகையில் அவற்றைச் செயல்படுத்தும் பணிகளையெல்லாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### 3000 இடங்களில் இலவச வை-பைய்!

பொதுமக்களுக்கும் பல சேவைகளை நம் துறையின்மூலம் செய்கிறோம். அடுத்து, free wifi. பொதுவெளியில், வேறு data service connection இல்லாமல் இருக்கும்பொழுது, மாநிலம் முழுவதும் சுமார் 3,000 இடங்களில் மக்களுக்கு free wifi சேவையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

Amma Canteen, bus stop என பல பொது இடங்களில் செய்து கொண்டிருக்கிறோம். இன்றுவரைக்கும் சுமார் 1,869 சென்னையிலும், 700க்குமேல் ஆவடி, தாம்பரம், கோயம்புத்தூர், மதுரை இதுபோன்ற இடங்களிலும் மொத்தம், சில இலட்சம் பேர் பயன்பெறுகின்ற அளவிற்கு free Wifi கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இசேவை மையங்கள், நாங்கள் ஆட்சிக்கு வரும்போது சுமார் 7,000, 8,000 இயங்கிக் கொண்டிருந்தன. அதை மிகவும் விரிவாக்கம் செய்து, இன்றைக்கு சுமார் 25,000 இசேவை மையங்கள் தமிழ்நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு ரூ.1.2 கோடி குடிமகன்கள் அவர்களுடைய சேவைகளை அரசாங்க அலுவலகங்களுக்கு வராமல் இசேவை மையத்திலேயே செய்யும்படி முன்னேற்றம் கண்டிருக்கிறோம். குறிப்பாக பழைய இசேவை மையங்கள் எல்லாம் அரசாங்க அலுவலகத்திலேயே இருந்தன. அப்போது Tahsildar office செல்வதற்கு பதிலாக Tahsildar officeல் இருக்கிற இசேவை மையத்திற்குச் சென்று செயல்படுவது, அந்தளவிற்கு பலனில்லை என்று அறிந்து, இவையெல்லாம் அவரவர்கள் வீட்டிற்குப் பக்கத்தில் இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். அரசாங்க அலுவலகத்தை நாட வேண்டாம் என்கிற அளவிற்கு திட்டமிட்டு, இந்தப் பணிகளைச் செய்து வருகிறோம். இன்னும் TNGIS அதாவது எப்படி நம்முடைய map software வருகிறதோ Tamil Nadu Geographical Information System என்ற ஒரு அடித்தளத்தை உருவாக்கி, மாண்புமிகு அண்ணன், வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் துறையில் நடக்கும் GRAINS database அதாவது அடங்கல், சிட்டா, பட்டா, crop insurance இவையெல்லாம் Geotag செய்து, locationக்கு tag செய்து, அதேமாதிரி, துணை முதலமைச்சர் அவர்கள் காக்கும் Planning and Development Department துறையில் economic activitiesஐ track செய்யும் அந்த GDP track செய்யும் data எல்லாம் Geotagging செய்து, சரியான இடத்தில் சரியான தகவல் எடுக்கலாம் என்பதைப் பார்த்து purity of data வையும் முன்னேற்றம் செய்து கொண்டிருக்கிறோம்.

### வெளிநாட்டினர் பயன் பெறுகிறார்கள்!

அடுத்தபடியாக, Tamil Virtual Academy. இதில் நாங்கள் ஆட்சிக்கு வரும்போது சுமார் 110 வெளிநாட்டு அலுவலகங்கள், 19 நாடுகளிலிருந்து வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தமிழ் கற்றுக்கொள்வதற்கும், அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு Diploma அதாவது பட்டயம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்து வந்து, அதை மிகவும் விரிவாக்கி இன்றைக்கு 185 centres 39 நாடுகளில் இன்றைக்குச் செயல்பாட்டில் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நான் வெளிநாடு பயணம் செல்லும்போது, தமிழ்ச் சங்கங்கள் அதேபோல் இந்த நம்முடைய 185 centresல் எல்லா பெரிய மாநகரங்களிலிருந்தும், எண்ணற்ற குழந்தைகள் தமிழ் பயிற்சி பெற்று, ஒவ்வொரு levelக்கும் ஒரு program, அது online booksம் சரி physical booksம் சரி எல்லாம் செய்து கொண்டிருப்பதால், சென்ற ஆண்டு சுமார் 1 இலட்சம் பேர் உலகளவில் தமிழ்நாட்டில் அல்லாத தமிழர்கள் இதில் பயன்பெற்றார்கள். இந்த முயற்சியை மொழியைத் தாண்டி music வரைக்கும் விரிவாக்கம் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார், இந்த tamil digital library. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், அதையும் மேலும் விரிவாக்கம் செய்து கிட்டத்தட்ட 30 ஆயிரத்திலிருந்து 76 ஆயிரமாக்கி, இப்போது அது Multimedia ஆக இதுவரைக்கும் வெறும் image படங்கள் எழுத்துக்கள் மட்டும் இருந்தது. இப்போது video, பாடல் Multimedia ஆக்கி அதனால், இன்னும் கொஞ்சம் அணுகுவதற்கு சுலபமாகவும் சிறப்பாகவும் இருப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக, கடைசி 2 ஆண்டுகளில் நான் இந்தத் துறைக்கு வந்த பிறகு Tamil software programs, applications, language models இதற்கெல்லாம் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, பல applications Keeladi Keyboard, Tamil Unicode converter, Tamil grammer analyser, Tamil digital dictionary, Word index, Kalaignar Syntactic Parser, Tamil PartofSpeech Tagger இந்த மாதிரி Bhashini ஒன்றிய அரசாங்கத்துடைய AI நிறுவனத்தோடும், ஒரு ஒப்பந்தம் போட்டு,

எல்லா வகையிலும், இந்த செயற்கை நுண்ணறிவு காலத்தில் நாம் ஆங்கிலத்தில் என்னென்ன செய்கின்றோமோ அதை நாமும் செய்ய வேண்டும் என்ற அளவில் முயற்சி மேற்கொண்டு, எல்லா வகைகளிலும் தமிழை இணையதளத்தில் சிறப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். 1999 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட பிறகு, இரண்டாவது முறையாக கணினி தமிழ் மாநாடு, 2024 என்ற மாநாட்டையும் நடத்தினோம். அந்த வகையில், பழைய நிபுணர்களை அழைத்து வந்து, ஐம்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் உரையாற்றி, குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, மொழி தொழில்நுட்பம் என்ற அடிப்படையில் முன்னேற்றம் செய்து கொண்டிருக்கிறோம்.

அடுத்து, Tamil Nadu FibreNet Corporation Limitedன் அடிப்படையில், 57,500 கி.மீ. நீளத்தில் optical fibre கண்ணாடி வலையமைப்பு போட்டு, 12,525 கிராமங்களுக்கு 1 Gbps bandwidth கொண்டுபோய் சேர்க்கிற முயற்சி சென்ற ஆட்சிக் காலத்தில் சிறிது தாமதமாக நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் இங்கே இருக்கிறார்; அமைச்சராக இருந்தவர். அப்பணியை இப்போது வேகப்படுத்தி 4 packagesல் 2 packages கிடு, கிடுவென வேகப்படுத்தி முடித்து, மொத்தத்தில் 93 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏற்கனெவே 1 வருடத்திற்கும்மேல் இத்திட்டம் project timeஐவிட காலதாமதமாகிவிட்டது. எப்படியாவது இந்த வருடத்தில் முடித்துவிட வேண்டும் என்று பார்க்கிறோம்.

## கூடுதலாக 50 புதிய ஆதார் பதிவு மையங்கள்!

12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் 11,639 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இந்த line போடப்பட்டுவிட்டது. அதனுடைய uptimeஐயும் நான் கவனித்து, அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். என்னுடைய கணிப்பின்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் இதை முழுமையாகச் செயல்படுத்தி, இன்று வரையிலும் சுமார் 2,000 அரசு அலுவலகங்களுக்கு inter -net சேவையை இந்த network மூலமாக அளித்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலங்களுக்கும் முழுமையாக TANFINET மூலமாக இச்சேவையை அளித்து, அதற்குப் பிறகு, படிப்படியாக பொதுமக்களுக்கு அளிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறோம். Actual ஆக இப்பணிகளை parallel ஆக செய்துகொண்டு வருகிறோம். இன்று வரையிலும் lastmile connectivityக்கு ஒன்றிய அரசாங்கத்தின் model அடிப்படையில் franchisee, அதாவது எப்படி கேபிள் டிவிக்கு ஆபரேட்டர்கள் இருக்கிறார்களோ அதே போன்று internet operators இந்த fibreஐ வைத்து செய்வதற்கு, இதுவரையிலும் 4,700 பஞ்சாயத்துகளிலிருந்து விண்ணப்பம் பெற்றிருக்கிறோம்; இந்த lastmile connectivityஐ provide செய்வதற்கு. கூடியவிரைவில் தனிநபர் வீடுகளுக்கு என் கணிப்பின்படி சுமார் 100 Mbps line, 1 மாதத்திற்கு 200 ரூபாய் என்ற கட்டணத்தில் வழங்கப்படும் என்று கருதுகிறேன். இத்தகைய முயற்சிகள், அதாவது high speed internet capable of providing video, அனைத்துக் கிராமங்களுக்கும் போய் சேருவது சமூக நீதியின் வெளிப்பாடாக நாம் கருத வேண்டும். ஏனெனில், இன்றைய சூழ்நிலையில் internetல் எத்தனையோ கல்வித் திட்டங்கள், முனைவர் பட்டம் பெறுகின்ற அளவிற்கு ஞானம் internetல் இலவசமாக கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இந்த high speed access இல்லாதது சமூக நீதிக்கு எதிரானது என்ற அடிப்படையில், இதை எல்லோருக்கும் கொண்டு சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இன்னும், இரண்டு, மூன்று விஷங்கள் இருக்கின்றன.

TACTV குறித்து உறுப்பினர் அவர்கள் கூறினார்கள், ஒரு காலத்தில் நிறைய connections இருந்தன. நான் இங்கே ஏற்கெனவே கூறியிருக்கிறேன், எத்தனையோ குறைகள் அந்த நிறுவனத்தில் இருந்தன. உண்மையில் அதை சரி செய்வது மிகவும் சிரமமான ஒரு பணியாக இருந்தது. அதையெல்லாம் தாண்டி, தற்போது tender விடப்பட்டு, முதன்முறையாக HD settop boxesக்கு விண்ணப்பம் பெறப்பட்டு, Cable operators மூலமாக, LCO மூலமாக அது தற்போது செயல்பாட்டில் இருக்கிறது. அது இன்னும் மூன்று மாதங்களில் சிறப்பாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

இதை ஏற்கெனவே இங்கே கூறியிருக்கிறேன். அரசாங்கம், TACTV போன்ற cable TV நடத்தக் கூடாது என்று ஒன்றிய அரசாங்கம் பல முறை நமக்கு கடிதம் அனுப்பியுள்ளது. அங்கே நம்முடைய தமிழ்நாட்டை சேர்ந்த இணை அமைச்சர் முருகன் அவர்கள் அந்தத் துறையில் இருக்கிறார். ஒவ்வொரு முறையும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இது பொது மக்களுக்கு பயனளிக்கும் ஒரு சேவை. இதை நீங்கள் ஏதோ ஒரு சட்டத்தைக் கூறி நிறுத்தக் கூடாது அல்லது TRAI யினுடைய guidelinesஐ கூறி நிறுத்தக் கூடாது என்ற வாதத்தை வைத்து, இது வரையில் அவர்களுடைய கடிதங்களை தாண்டிதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல், சிறப்பான 2 முயற்சிகள், தலைவர் கலைஞர் காலத்தில் ICT Academy of Tamil Nadu என்று ஒரு training நிறுவனம். இது ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் பல மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டாலும், நம் அளவிற்கு அவர்கள் திட்டமிடாததாலும், நம் அளவிற்கு நல்ல அரசியல் தலைமையில்லாததாலும், இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் பயிற்சி மையமாக, அரசாங்கம் நடத்தும் இந்தியாவிலேயே best training academy ஆக தமிழ்நாட்டை தாண்டி 10 மாநிலங்களில் அலுவலகங்கள் வைக்கின்ற அளவிற்கு ஒரு national company ஆக உருவாகியிருக்கிறது. நம்முடைய company ஆகயிருந்தாலும் அந்தளவிற்கு அனைத்து இடங்களிலும் நிறுவப்பட்டு, BRIDGE conference என்று கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றவர்களையும், company நடத்துகின்றவர்களையும் இணைத்து, இன்றைக்கு வேலை வாய்ப்புக்கு என்ன கற்றுக் கொடுத்தால், இவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு சிறப்பாக இருக்கும் என்று அடிப்படையில் ஒரு conferenceஐ 12 இடங்களில் நாடு முழுவதும் நடத்தினோம். ஒவ்வொன்றிற்கும் அவ்வளவு வரவேற்பு இருந்ததால், actually ஒவ்வொரு conference, மாநாட்டையும் இலாபகரமாக நடத்தினோம். அதனை இன்னும் சிறப்பிக்கலாம். ஆனால், நான் இந்தத் துறைக்கு வந்த பிறகு நான் கொடுத்த புதிய உத்தரவு, 60 சதவிகித முயற்சிகள் நம்முடைய மாணவர்களுக்குத்தான் இருக்க வேண்டும்;

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்